இந்த வலைதளம் TNPSC தேர்விற்கு தயார் செய்யும் நண்பர்களுக்கு உதவும் நோக்கத்தில் தமிழக அரசின் புதிய சமச்சீர்க்கல்வி பாடப்புத்தகத்திலிருந்து பாடக்குறிப்புகள் வழங்குப்பட்டுள்ளது. மேலும் இதில் 5000 க்கும் மேற்பட்ட Objective Type Questions வழங்கப்பட்டுள்ளது. இதிலுள்ள மாதிரித் தேர்வுகளில் நீங்கள் பயிற்சி பெறலாம். தொடர்ந்து புதிய பாடக்குறிப்புகளும் வழங்க இருக்கிறோம்....

https://www.vetripadigal.com/
https://www.vetripadigal.com/tnpsc-online-test/

# 9 ஆம் வகுப்பு – சமூக அறிவியல்

# குடிமையியல்

## அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி

- ✓ மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார்.
- ✓ சுதந்திரம் அடைந்த பின் இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் – 1952
- ✓ இம்பீரியல் கவுன்சில் எனும் மத்திய சட்டசபைக்கும் மாகாண சட்டசபைக்கும் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 1920 ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் முதல் பொதுத்தேர்தல் ஆகும்.

## அலகு - 2

## தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்

### இந்தியாவில் தேர்தல் முறை

- இந்திய தேர்தல் முறை இங்கிலாந்தில் உள்ள தேர்தல் முறையினைப் பின்பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- தற்போதைய நவீன இந்தியாவானது ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் 1947 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது.
- தேர்தல் ஆணையம் அமைத்திட இந்திய அரசியலாமைப்பின் பிரிவு 324ன் படி வழிவகைச் செய்கிறது.
- இந்தியாவில் ஜனவரி 25ம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம்.

### நோட்டா (None Of The Above)

- இந்திய தேர்தல் நடத்தை விதிகள் (1961) எனும் சட்டத்தின் விதி எண் 49-O இம்முறை பற்றி விவரிக்கிறது.
- 2014ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதல் முறையாக NOTA அறிமுகப்படுத்தப்பட்டது. உலகில் நோட்டாவை அறிமுகப்படுத்திய 14வது நாடு இந்தியாவாகும்.
- **நேரடி தேர்தல்** - மக்களவை தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல், சட்டமன்றத் தேர்தல்களில் சட்டப்பேரவை உறுப்பினகளை தேர்ந்தெடுத்தல்.
- **மறைமுகத் தேர்தல்** – மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வாக்களித்துத் தேர்வு செய்யும் முறையே மறைமுகத் தேர்தல் ஆகும். குடியரசுத் தலைவர் தேர்தலில் இத்தகைய முறையானது கடைபிடிக்கப்படுகிறது.

### கட்சி முறையின் வகைகள்

- **ஒரு கட்சி முறை** – சீனா, கியூபா, முன்னாள் சோவியத் யூனியன் ஆகிய நாடுகள்.
- **இரு கட்சி முறை** – இரு முக்கிய கட்சிகள் மட்டுமே பங்கு பெறுவது ஆகும்.
  எ.கா. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து.
- **பல கட்சி முறை** – இரண்டிற்கும் மேற்பட்ட கட்சிகள் பங்கு பெறுவது ஆகும்.
  எ.கா. இந்தியா, இலங்கை, பிரான்ஸ், இத்தாலி.



Vetripadigal.com

## தேசிய கட்சிகள்

- ஒரு கட்சி குறைந்தது நான்கு மாநிலங்களிலாவது மாநிலக் கட்சி என்ற தகுதியை பெற்றிருக்குமானால் அது தேசியக் கட்சி என்ற தகுதியை பெறுகிறது.
- 2017 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய கட்சிகளின் எண்ணிக்கை 7 ஆகும்.

## மாநில கட்சிகள்

- மாநிலக் கட்சிகள் பொதுவாக பிராந்தியக் கட்சிகள் என அழைக்கப்படுகிறது.

## மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு

- மக்களாட்சியில் எதிர்கட்சித் தலைவர் முக்கியப் பங்கு வகிக்கிறார். இவர் கேபினட் அமைச்சர் தகுதி பெறுகிறார்.
- பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக இவர் அரசுத் துறைகளின் செயல்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதோடு மக்கள் நலனக்காகச் செலவிடப்படும் பொதுப் பணத்தை ஆய்வு செய்கிறார்.

## அழுத்தக் குழுக்கள்

- அழுத்தக் குழுக்கள் என்ற சொல் ஐக்கிய அமெரிக்க நாட்டில் உருவாக்கப்பட்டது. அழுத்தக் குழு அரசின் மீது அழுத்தம் செலுத்தி அரசின் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரும்படி நெருக்கடி தருவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.
- அழுத்தக் குழுக்கள் நலக்குழுக்கள் அல்லது தனிப்பட்ட நலக்குழுக்கள் என்றும் அழைக்கப்படுகிறது. இவை அரசியல் கட்சியிலிருந்து வேறுபட்டவை. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விளைவதும் இல்லை.
- இந்தியாவில் தற்போது அதிக எண்ணிக்கையிலான அழுத்தக் குழுக்கள் உள்ளன. இவை இங்கிலாந்து, பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் உள்ளது போல் வளர்ச்சி அடைந்தவையாக காணப்படுவதில்லை.
- அரசியலின் மற்றொரு முகம் என்று அழுத்தக் குழுக்களைக் கூறலாம்.
- அழுத்தக் குழுக்களுக்கு எ.கா. இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை சம்மேளத்தின் கூட்டமைப்பு (FICCI)

## அலகு - 3

## மனித உரிமைகள்

- இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை சமாளிக்கவும், எதிர்காலத்தில் உலகப்போர் போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டும், 1945 ல் ஐ.நா. சபை தொடங்கப்பட்டது.
- 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று பாரிசில் நடைபெற்ற ஐ.நா. பொது சபையில் நிறைவேற்றப்பட்ட (பொது சபை தீர்மானம் 217A) இந்தப் பேரறிக்கை, அனைத்துலக நாடுகள் மற்றும் அனைத்துலக மக்களின் பொதுத்தர சாதனை ஆகும்.
- மனித உரிமைகள் பற்றிய பேரறிக்கையில் 30 உறுப்புகள் (Articles) உள்ளன.

### இந்தியாவில் அடிப்படை உரிமைகள்

- அடிப்படை உரிமைகள்
  1. சமதத்துவ உரிமை
  2. சுதந்திர உரிமை
  3. சுரண்டலுக்கு எதிரான உரிமை
  4. சமய மற்றும் மனச்சான்று சுதந்திரத்திற்கான உரிமை
  5. சிறுபான்மையினருக்கான பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்
  6. அரசமைப்புச் சட்ட வழி தீர்வுகளுக்கான உரிமை

### சமத்துவ உரிமை

- சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் மூலம் அனைவருக்கும் சம பாதுகாப்பு என்பதே இவ்வுரிமை ஆகம்.

### சுதந்திர உரிமை

- ஆறு வகையான சுதந்திரங்கள் நமது அரசமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுளளன.
  1. பேச்சுரிமை
  2. ஆயுதமின்றி கூடும் உரிமை
  3. சங்கங்கள் அமைக்கும் உரிமை
  4. இந்தியாவில் எந்த பகுதியிலும் வசிக்கும் உரிமை
  5. இந்தியா முழுவதும் சுதந்திரமாக நடமாடும் உரிமை
  6. எந்த தொழிலையும், வணிகத்தையும் செய்யும் உரிமை

### சுரண்டலுக்கெதிரான உரிமை

- 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை சுரங்கங்கள், அல்லது மற்ற அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

### சமயச் சுதந்திரம் மற்றும் பகுத்தறிவுக்கான உரிமை

- குடிமக்கள் தாங்கள் விரும்பிய சமயத்தினை ஏற்கவும் பின்பற்றவும் உரிமை அளிக்கிறது.

### பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்

- கல்விக்கூடங்களை அமைக்கவும், நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் நமக்கு உரிமை உள்ளது. சமயச்சார்பு கல்வி அளிக்க மக்கள் மத நிறுவனங்களை நிறுவலாம்.

### அரசமைப்பு தீர்வழிக்களுக்கான உரிமை

- ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகையில், அரசமைப்பு தருகின்ற அரசமைப்பு தீர்வழிகளுக்கான உரிமையின்படி அவர் நீதிமன்றத்தை அணுகலாம்.

### அடிப்படை கடமைகள்

- 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படைக் கடமைகள் என்ற பகுதி இடம்பெற்றிருக்கவில்லை.
- 1976 ஆம் ஆண்டு 42 வது சட்ட திருத்தத்தின் மூலம் அவை இணைக்கப்பட்டன. அரசமைப்பு கீழ்கண்ட 11 அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது.

1. ஒவ்வொரு இந்திய குடிமகனும் இந்திய அரசமைப்புச் சட்டத்தினை மதிப்பதுடன், அரசமைப்புச் சட்ட நிறுவனங்கள், இலட்சியம், தேசியக்கொடி மற்றும் தேசியகீதம் ஆகியவற்றையும் மதிக்க வேண்டும்.
2. விடுதலைப் போராட்டத்தின்போது புத்துணவர்வளித்த உன்னதமான இலட்சியங்களை நினைவிற்கொண்டு பின்பற்ற வேண்டும்.
3. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.
4. தேவை ஏற்படின், நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு, நாட்டுப்பணியாற்ற வேண்டும்.

5. சமய, மொழி, மண்டல அல்லது பிரிவு வேறுபாடுகளைக் கடந்து இந்திய மக்களின் அனைவர் மனதிலும் சகோதரத்துவமும் இணக்கமும் ஏற்பட பாடுபடவேண்டும். பெண்களை இழிவு செய்யும் செயல்களை விட்டொழிக்க வேண்டும்.
6. நமது கூட்டுப் பண்பாடு மரபினைப் போற்றி பாதுகாக்க வேண்டும்.
7. காடுகள், ஏரிகள், ஆறுகள், விலங்கினங்கள் ஆகியவை உள்ளிட்ட புறச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன் உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும்.
8. அறிவியல் உணர்வு, மனிதநேயம், பகுத்தறிவு மற்றும் சீர்திருத்த உணர்வை வளர்க்க வேண்டும்.
9. பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வன்முறையை வெறுத்து ஒதுக்க வேண்டும்.
10. தனிப்பட்ட அளவிலும் கூட்டு செயற்பாட்டிலும் மிகச் சிறந்த நிலையை அடைய முயலுவதன் மூலமாக நாட்டின் மேம்பாட்டிற்கு முயல வேண்டும்.
11. 14 வயது வரை உள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது காகப்பாளர் குழந்தைகளின் கல்விக்கான வாய்ப்புக்கு வகை செய்திடல் வேண்டும்.

## இந்திய மனித உரிமைகள் ஆணையம் (National Human Rights Commission)

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1993 ஆம் ஆண்டு 12 ஆம் நாள் அமைக்கப்பட்டது. தேசிய மனித உரிமைகள் ஆணையம்.
- இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இவ்வமைப்பு ஒரு தலைவரையும், சில உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

## மாநில மனித உரிமைகள் ஆணையம் (State Human Rights Commission)

- இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநில மனித உரிமைகள் அணையம் அமைக்க வழி செய்யும் வகையுரை ஒன்று பிரிவு 21, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 ல் உள்ளது.
- இது மாநில எல்லைக்குட்பட்டதாகும். இவ்வாணையத்தில் ஒரு தலைவரும், இரு உறுப்பினர்களும் உள்ளனர்.

## குழந்தைகளுக்கான உரிமைகள்

- ஐக்கிய நாடுகள் சபை 18 வயது வரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. இது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரிவு 25 ல் காணப்படுகிறது.

- இக்கொள்கைகளின் அடிப்படையில் ஐ.நா.சபை 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது.
- **கல்விக்கான உரிமை** – அரசமைப்பின் பிரிவு 21A ல் உள்ளபடி 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க 2009 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.
- இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (Right of children compulsory education) 2009, ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக் கல்வி பயில உரிமை உள்ளது என்பதை வலியுறுத்துகின்றது.

## POSCO சட்டம்

- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம்.
- இச்சட்டம் 18 வயது வரை உள்ளவர்களை குழந்தைகள் என வரையறுக்கிறது.
- (The protection of children from sexual offence Act, 2012)
- பனிரெண்டு வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமை செய்யப்படும்போது குற்றவாளியைத் தண்டிக்க (மரணதண்டனை உட்பட) வகை செய்யும் சட்டம் 2018 ஏப்ரல் மாதம் கொண்டவரப்பட்டது. குற்றவியல் சட்ட திருத்தச்சட்டம் 2018.
- விதிக்கப்படும் அபராதத் தொகையானது பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

## இந்திய அரசமைப்பில் குழந்தைகள் உரிமை

- பிரிவு 24. பதினான்கு வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது.
- பிரிவு 45. பதினான்கு வயது நிறைவடையும் வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

## பெண்களுக்கு மூதாதையர் சொத்துரிமை

- தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1989 ஐ நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியுள்ளது.

- மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005 – இல் திருத்தங்களை மேற்கொண்டது. இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.

### பெண் தொழிலாளர் நலனும் – டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரும்

- சுரங்க தொழிலாளர் பேறுகால நன்மைச் சட்டம், பெண் தொழிலாளர் நல நிதி, பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நன்மைகள், நிலக்கரிச் சுரங்கங்களில் சுரங்கப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்படுவதற்கான தடையை மீட்டெடுத்தல் போன்ற சட்டங்கள் டாக்டர் .பி.ஆர்.அம்பேத்கர் அவர்களால் பெண் தொழிலாளர்களுக்காக இந்தியாவில் இயற்றப்பட்டது.

### இடஒதுக்கீடு

- பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் 69% இடஒதுக்கீட்டினைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.
- மேலும் பெண்களுக்கு 33% மாற்றுத் திறனாளிகளுக்கு 4% முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு பிரிவின்கீழும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு 20% ஒதுக்கப்பட்டுள்ளது.

| பிரிவுகள் | இட ஒதுக்கீடு |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் | 26.5 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | 20 |
| ஆதிதிராவிடர் | 18 |
| பழங்குடியினர் | 3 |

### தகவல் அறியும் உரிமைச்சட்டம்

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் இந்தியாவில் 2005 அக்டோபர் மாதம் இயற்றப்பட்டது.
- இதன்படி தகவல்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும்.
- நாட்டின எல்லைப் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைகளான எல்லைப் பாதுகாப்பு படை, மத்திய சேமக் காவல் படை, மற்றும் உளவுத்துறைப் பணியகம் ஆகிய அமைப்புகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

- விண்ணப்பத்தில் உங்கள் முழுபெயர், முகவரி எழுதி கையெழுத்திட்டு தேதியுடன் பதிவு தபாலின் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பட வேண்டும்.
- அனுப்பப்பட்ட அஞ்சலுக்கு 30 நாட்களுக்குள் பதில் பெறப்படவில்லை எனில் 1 விண்ணப்பத்தை மேல்முறையீடுக்கு அனுப்பலாம்.

### தகவல் துளி

#### காந்தியடிகள்

- 1893 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தென் ஆப்பிரிக்காவில் உள்ள பிரிடோரியா என்னும் இடத்திற்கு தொடர்வண்டியில், பீட்டர்மரிட்ஸ்பர்க் என்ற இடத்தில் ஓடும் வண்டியிலிருந்து தள்ளிவிடப்பட்டார். அந்நிகழ்வு அவருடைய வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.
- வெள்ளையர் அல்லதவர்களுக்கு எதிராக நிலவிய இனஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற முடிவை எடுத்தார்.

#### நெல்சன் மண்டேலா

- இன ஒதுக்கல் தென்னாப்பிரிக்காவில் காணப்பட்ட இனப்பாகுபாடு ஆகும்.
- நெல்சன் மண்டேலா இன ஒதுக்கல் எனப்படும் கொள்கைக்கு எதிராக தொடர்ச்சியாகப் போராடினார். இதனால் 27 வருடங்கள் சிறைப்பட்டார்.
- தென்னாப்பிரிக்க தலைவர் F.W. கிளார்க் 1990 ல் அவரை விடுதலை செய்தார்.
- மண்டேலா மற்றும் டி கிளார்க் ஆகியோரது கடும் முயற்சியினால் இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவிற்கு வந்தது. 1994 ல் பல்லினப்பொதுத் தேர்தல் நடைபெற்றபொழுது, மண்டேலாவின் தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று, அந்நாட்டின் தலைவரானார்.

#### மலாலா

- நோபல் பரிசு பெற்றவர். பாகிஸ்தானில் பெண்களின் கல்வி உரிமைக்காக போராடியதில் பிற்போக்கான சக்திகளால் 2012, அக்டோபரில் சுடப்பட்டார். இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் என்னுமிடத்தில் மருத்துவ சிகிச்சைப்பெற்று உயிர் பிழைத்தார்.
- நீதிப் பேராணை என்பது ஒரு செயலை செய்யவோ அல்லது அச்செயலை தடுக்கவோ, நீதிமன்றத்தால் அல்லது வேறு சட்ட அமைப்பினால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான உத்தரவு.

### கைலாஷ் சத்யார்த்தி

- 'பச்பன் பச்சாவ் அந்தோலன்' (இளமையைக் காப்பாற்று இயக்கம்) போன்ற பல குழந்தைகள் உரிமை அமைப்புகளின் நிறுவனர் கைலாஷ் சத்யார்த்தி.
- 1998 ல் உலக மக்களின் கவனத்தை குழந்தை உழைப்பு முறை மீது திசை திருப்ப, 80,000 கி.மீ நீள, குழந்தை உழைப்புக்கு எதிரான உலகளாவிய அணிவகுப்பை முன்னின்று நடத்தினார்.

### ரோசா – பார்க்ஸ் – சுயமரியாதையின் குறியீடு

- 1955 ம் ஆண்டு மாண்டகோமெரியிலிருந்து அலபாமா வரை செல்லும் நகரப்பேருந்தில் தனக்கான இடத்தை ஆங்கிலேயருக்கு தர மறுப்பதின் மூலம் ரோசா பார்க் ஐக்கிய அமெரிக்காவில் குடிமை உரிமைகள் இயக்கம் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தார்.
- இதனால் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார். பின் மார்டின் லூதர் கிங் ஜீனியர் அவர்களால் தலைமை தாங்கி இப்போராட்டம் வழி நடத்தப்பட்டது.
- இந்தியாவின் மக்கள்தொகையில் 8.6 சதவிகிதம் பழங்குடியின மக்கள் உள்ளனர்.
- கேரள அரசு வணிக நிறுவன சட்டத்தில் 2018 ஜுலை மாதத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்தது.
- "ஒரு மனிதனுடைய உரிமை அச்சுறுத்தப்படும்போது, ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் குறைக்கப்படுகிறது என்றார் ஜான். எஃப். கென்னடி.
- மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் 2007 ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது.
- ஆபத்து காலத்தில் உதவிட காவலன் SOS செயலி தமிழ்நாடு அரசினால் பொது மக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1098 – என்பது உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான உதவி மைய எண் இந்தியாவின் முதல் 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைதொடர்பு சேவை ஆகும்.

Vetripadigal.com

## அலகு - 5

## அரசாங்கங்களின் வகைகள்

### ஒற்றை ஆட்சி முறை

- இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், மற்றும் இலங்கை ஆகியவை ஒற்றை ஆட்சி முறையின் உதாரணம்.
- அரசு என்னும் பதம், பழைய பிரஞ்சு வார்த்தையான கவர்னர் என்பதிலிருந்தும் இயக்கு, ஆட்சி செய், வழி நடத்து, ஆள் என்று பொருள் தரும் லத்தீன் வார்த்தையான குபர்னர் என்பதிலிருந்து பெறப்பட்டது.
- சிறு நாடுகளுக்குப் மட்டுமே பொருத்தமானது.

### கூட்டாட்சி முறை ஆட்சி

- தேசிய அரசுக்கு பிராந்திய அரசுக்கும் இடையில் இருக்கும் உறவின் அடிப்படையிலேயே ஒற்றை ஆட்சி முறை என்றும் கூட்டாட்சி முறை என்றும் அரசு வகைப்படுத்தப்படுகிறது.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, ரஷ்யா, பிரேசில், அர்ஜென்டினா போன்ற நாடுகள் கூட்டாட்சி முறை ஆட்சி செய்யும் நாடுகள் ஆகும்.

| ஒற்றை ஆட்சி முறை | கூட்டாட்சி முறை |
|---|---|
| ஒரேயொரு அரசு அல்லது துணைக் குழுக்கள் | இரண்டு நிலையில் அரசாங்கம் |
| துணைக் குழுக்கள் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது | கூட்டாட்சியின் குழுக்கள் மத்திய அரசுக்கு உட்பட்டவை |
| அதிகாரப் பகிர்வு இல்லை | அதிகாரப் பகிர்வு |
| மையப்படுத்தப்பட்ட அதிகாரம் | அதிகாரப் பரவல் |

### இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சி முறை அம்சங்கள்

- இரட்டை அரசாங்கம்
- எழுதப்பட்ட அரசியலமைப்பு
- அதிகாரப் பகிர்வு
- அரசியல் அமைப்பின் உயர் அதிகாரம்
- நாட்டின் உட்சபட்ச சட்டமாக அரசியலமைப்புச் சட்டம் விளங்குகிறது.

- ❖ நெகிழும் தன்மையற்ற அரசியல் அமைப்பு
- ❖ சுதந்திரமான நீதித்துறை
- ❖ இரண்டு அவை ஆட்சி

## நாடாளுமன்ற ஆட்சி முறை

- ❖ நாடாளுமன்ற ஆட்சி முறை அதிபர், மக்களாட்சி முறை என இருவகைகளாகப் பிரிக்கலாம்.
- ❖ அமைச்சரவை அரசாங்கம் அல்லது பொறுப்பு அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் அரசாங்க மாதிரி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.
- ❖ பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா போன்ற நாடுகளில் நாடாளுமன்ற ஆட்சி முறை ஆகும்.

| நாடுகள் | நாடாளுமன்றங்களின் பெயர்கள் |
|---|---|
| இஸ்ரேல் | பந்தெஸ்டாக் |
| டென்மார்க் | போக்டிங் |
| நார்வே | ஸ்டார்டிங் |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | காங்கிரஸ் |

## நாடாளுமன்ற ஆட்சி முறையின் நிறைகள்

- ❖ சட்டமன்றம் மற்றும் நிர்வாகத் துறைக்கு இடையிலான இணக்கம்
- ❖ பொறுப்பான அரசாங்கம்
- ❖ சர்வாதிகாரத்தைத் தடுக்கிறது
- ❖ பரவலான பிரதிநிதித்துவம்

## குறைகள்

- ❖ நிலையற்ற அரசாங்கம்
- ❖ தொடர்ச்சியற்ற கொள்கைகள்
- ❖ அமைச்சரவையின் சர்வாதிகாரம்
- ❖ அதிகாரங்களைப் பிரிப்பதில் உள்ள சிக்கல்கள்

Vetripadigal.com

### அதிபர் மக்களாட்சி முறை

- அமெரிக்கா, பிரேசில், இரஷ்யா, இலங்கை போன்ற நாடுகள்.

### அதிபர் மக்களாட்சியின் அம்சங்கள்

- அமெரிக்க அதிபர் மாகாணம் மற்றும் அரசின் தலைவராகத் திகழ்கிறார்.
- அமொரிக்க அதிபர் வாக்காளர் மன்றத்தால் நான்காண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- அதிபர் அமைச்சரவையின் உதவியோடு ஆட்சி புரிகிறார்.
- அமைச்சரவையைக் “கிச்சன் கேபினட்” என்று அழைக்கிறார்கள்.
- இது தேர்ந்தெடுக்கப்படாத துறைசார்ந்த செயலர்களைக் கொண்ட சிறு ஆலோசனைக் அமைப்பு ஆகும்.
- அதிபரால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படும் இவர்கள் அதிபருக்கு மட்டுமே எந்தநேரத்திலும் கடமைப்பட்டவர்களாகவும் எந்தநேரத்திலும் பதவியிறக்கம் செய்யப்படுவதற்கு உட்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

### இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவு

- இந்திய நாடு, இந்திய அரசிலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு உட்பட்டு மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும்.
- மத்திய மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டாலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பது மத்திய அரசே.
- மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு என்பது,
    1. சட்ட மன்ற உறவுகள் (பிரிவுகள் 245 முதல் 255 வரை)
    2. நிர்வாக உறவுகள் (பிரிவுகள் 256 முதல் 263 வரை)
    3. நிதி உறவுகள் (பிரிவிகள் 268 முதல் 294 வரை)
- மத்திய மாநில அரசுகள் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் படைத்தவை. ஆனாலும் அதிகாரங்கள் வேறுபடுகின்றன.
- சில குறிப்பிட்ட துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துறைகள் மத்தியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- சில துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கே உள்ளது. அத்துறைகளுக்கான சட்டங்களை அந்தந்த மாநில அரசுகளே இயற்றும். இவை மாநிலப்பட்டியல் எனப்படுகிறது.
- சில துறைகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றுள்ளன. இவை பொதுப்பட்டியல் எனப்படுகிறது.

**மத்திய பட்டியல்**

- மத்தியப் பட்டியலில் 100 துறைகள் உள்ளடங்கியுள்ளது.
- வெளியுறவுத் துறைகள், பாதுகாப்பு, ஆயுதப்படைகள், தொலைதொடர்பு, தபால் மற்றும் தந்தி, மாநிலங்களுக்கிடையேயான வியாபாரம் மற்றும் வணிகம்.

**மாநிலப் பட்டியல்**

- மாநிலப் பட்டியலில் 61 துறைகளைக் கொண்டுள்ளது.
- மாநிலத்தின் பொது ஒழுங்கு, காவல் துறை, நீதித்துறை நிர்வாகம், சிறைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், விவசாயம் போன்றவை.

**பொதுப்பட்டியல்**

- பொதுப்பட்டியல் 52 துறைகள் உள்ளன.
- குற்றவியல் மற்றும் சிவில் நடைமுறைகள், திருமணம் மற்றும் விவகாரத்து, பொருளாதாரம் மற்றும் சிறப்புத் திட்டமிடல், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சகங்கள், மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியன.

தகவல் துளி

**பூடானில் ஏற்பட்ட வரலாற்று மாற்றம்**

- மூன்றாம் அரசர் – அடிமைத்தனத்தை ஒழித்தார்
- நான்காம் அரசர் – கம்பீரமான வட்டங்களைத் துறந்தார்.
- ஐந்தாம் அரசர் – குடியரசு தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள்
- இந்த மாற்றம் பரம்பரை மன்னராட்சியிலிருந்து நாடாளுமன்ற முறை ஆட்சிமாற்றத்திற்கான செயல்பாடுகளாகும். இப்போது பூட்டான் ஒரு நாடாளுமன்ற மக்களாட்சி நாடாகும்.

**மொத்த தேசிய மகிழ்ச்சி**

- பூட்டான் அரசின் அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள இக்கருத்து ஜூலை 18, 2008 ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- மொத்த தேசிய மகிழ்ச்சி என்னும் பதத்தைப் பூட்டானின் நான்காம் அரசரான ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் 1970 ல் உருவாக்கப்பட்டது

### ஏப்ரல் புரட்சி மற்றும் நேபாளத்தில் மக்களாட்சி

- ஏப்ரல் 2006 ல் நேபாளத்தின் 'ஏழு கட்சிகளின் சார்பின்' தலைநகர் காத்மண்டுவில் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர்.
- அப்போது நடைபெற்ற கூட்டத்தில் அரசர் ஞானேந்திராவின் முடியாட்சி முடிவு பெற்று, மக்களாட்சிக்கு வழிவகுத்தது.

## அலகு 6

## உள்ளாட்சி அமைப்புகள்

- ரிப்பன் பிரபுவின் 1882 ஆம் ஆண்டு தீர்மானத்தின் படி, மேற்கத்திய நாடுகளின் மக்காளட்சி முறையின் அடிப்படையில் 19 ஆம் நூற்றாண்டில் கால் இறுதியில் உள்ளாட்சி அமைப்புகள் இந்தியாவில் புத்துயிர் பெற்றன.
- நவீன உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளமிட்டதால், ரிப்பன் பிரபு 'உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை' எனப்படுகிறார்.
- 1935 ல் இந்திய அரசு சட்டம், மாகாணங்களில் தன்னாட்சியை அறிமுகப்படுத்தியது. இச்சட்டம் 1937 ல் நடைமுறைக்கு வந்தது.
- காங்கிரஸ் ஆட்சி அமைத்த மாகாணங்களில் ஊரக வளர்ச்சிக்குச் சிறப்பு கவனம் அளிக்கப்பட்டது.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் கிராமங்களிலிருந்து நகரங்கள் வரை கட்டமைக்கப்பட வேண்டும் என்பது ஒரு முக்கிய கூறு ஆகும்.
- அரசமைப்பில் இணைக்கப்பட்ட 40 ஆம் சட்டம் கூறுவது, 'அரசு, ஊராட்சி மன்றங்களை அமைப்பதற்கும் தன்னாட்சி அமைப்புக் கூறுகளாக அவை இயங்குவதற்கும் தேவைப்படும் அதிகாரங்களையும் அதிகார அடைவையும் அவற்றுக்கு வழங்குவற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்'.

### ரிப்பன் பிரபு

- 1882 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்ததன் மூலம் இந்தியர்களுக்கு சுதந்திரத்தின் சுவையை அறிமுகப்படுத்தியவர் ஆவார்.

### இந்திய விடுதலைக்குப் பின் உள்ளாட்சி அமைப்புகள்

- சமூக அபிவிருத்தி திட்டம் (1952) மற்றும் தேசிய நீட்டிப்பு சேவை (1953), 1957 ல் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 73 மற்றும் 74 வது அரசமைப்பு திருத்தச் சட்டங்கள் (1992) சிறப்பம்சங்கள்

- உள்ளாட்சி அமைப்புகளில் நேரடித் தேர்தலின் மூலம் அனைத்து அளவிலும் இடங்கள் நிரப்பப்படுகின்றன.
- பஞ்சாயத்து தலைவர்களுக்கான இடங்களில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு, மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.
- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரே மாதிரியான ஐந்தாண்டு பதவிக்காலம் மற்றும் பதவிக்காலம் நிறைவடையும் முன்பே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

### தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்பம்சங்கள்

- தமிழ்நாட்டில் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- மூன்று அடுக்கு அமைப்பு
- கிராம சபை
- தேர்தல் ஆணையத்தினை நிறுவுதல்
- நிதி ஆணையத்தினை நிறுவுதல்
- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு
- மாவட்ட திட்டக்குழுக்களை அமைத்தல்

### வருவாய்

- மூன்றடுக்கு அமைப்பு உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்பில் கிராம ஊராட்சி மட்டுமே வரி விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

### வரிகள்

- சொத்து வரி
- தொழில் வரி
- வீட்டு வரி
- குடிநீர் இணைப்புக்கான கட்டணம்
- நில வரி
- கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

### கிராம சபை

- ஒரு வருடத்தில் நான்கு முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும்.

  1. சனவரி 26 – குடியரசு தினம்
  2. மே 1 – உழைப்பாளர் தினம்
  3. ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்
  4. அக்டோபர் 2 – காந்தி பிறந்த தினம்.

### தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சி

- தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுகளில் சோழர்களது ஆட்சிக் காலத்தில், 'குடவோலை முறை' என்னும் இரகசிய தேர்தல் முறை புழக்கத்தில் இருந்தது.
- 1950 இல் மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டது.
- 1957, உள்ளூர் நிர்வாக சீர்திருத்தங்கள்
- 1958 ல் மதராஸ் பஞ்சாயத்து சட்டமும், மதராஸ் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் சட்டமும் இயற்றப்பட்டன.

### மாவட்ட ஊராட்சி

- 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பிரிக்கப்படுகிறது.
- இங்கு பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- இவ்வுறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

### பேரூராட்சி

- பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி ஆகும்.
- பேரூராட்சி தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- பதவிக்காலம் 5 ஆண்டுகள்.
- பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார்.

## நகராட்சி

- ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி நகராட்சி எனப்படும்.
- நகர சபைத் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

## மாநகராட்சி

- பல இலட்சம் மக்கள் தொகை கொண்ட பெரு நகரப்பகுதிகள் மாநகராட்சி எனப்படும்.
- மாநகராட்சித் தலைவர் மேயர் என்று அழைக்கப்படுகிறார்.
- பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.
- மாநகராட்சி ஆணையர் நிர்வாக அலுவலர் ஆவார்.
- தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள் உள்ளன.
- அவை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், தஞ்சாவூர், மற்றும் திண்டுக்கல் ஆகியவை ஆகும்.
- இந்திய ஆட்சிப்பணி (ஐஏஎஸ்) அதிகாரி ஒருவர் மாநகராட்சியின் ஆணையராக நியமிக்கப்படுகிறார்.
- மாநகராட்சி சபையில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் அனைத்தும் இவரால் செயல்படுத்தப்படுகின்றன.
- மாநகராட்சி அலுவலகம் இவரது செயல்பாடுகளுக்கு உதவுகின்றது.
- மாதிரி பஞ்சாயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டின் **ஓடந்துறை** கிராமம் விளங்குகிறது.

தகவல் துளி

## காந்தியின் கிராமசுயராஜ்யம்

- கிராம சுயராஜ்ஜியத்தை விரும்பினார்.
- இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்பதை உணர்ந்தார் காந்தியடிகள்.

## நகராட்சி தலைவராக பெரியார்

- 1917 ல் ஈரோடு நகராட்சியின் தலைவராக பெரியார் பதவி வகித்தார்.
- 1919 ல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் செயல்படுத்தினார்.
- இந்திய நகராட்சி நிர்வாகங்களின் வரலாற்றில் இத்திட்டத்தை முதல்முதலில் செயல்படுத்தியவர் பெரியார் என அறியப்படுகிறது.